# ஒட்டன்சத்திரம் நகராட்சி

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 83 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.28.06.2019–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள்.06.01.2020 (திங்கள் கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 06.01.2020

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் : 1**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 18 வது வார்டு சீத்தப்பட்டி பகுதியில் நகராட்சிக்கு செந்தமான இடத்தில் அவ்வப்போது ஆக்கிரமிப்புகள் ஏற்படுவதை தொடர்ந்து, அப்பகுதியை சுற்றிலும் பாதுகாப்பு வேலி அமைக்கவும் அதில் உள்ள பொது கிணற்றில் சிதலமடைந்த சுற்றுச்சுவரினை மராமத்து பணிகள் செய்து பாதுகாப்பு செய்யும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியானது பொதுமக்கள் நலன் கருதி, ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் – 1**

**பொருள் : 2**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 14வது மத்திய நிதி ஆணைய நிதி ஒதுக்கீடு (CFC) 2019–20 திட்டத்தின் கீழ் சாலைகள் மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ள தார் சாலைகள் மற்றும் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலைகள்அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்படும் மதிப்பீடு கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| | சிப்பம்–1 | |
| 1 | காந்தி மார்க்கெட் குறுக்கு சாலைகள், சொசைட்டி காலனி, ஏ.டி காலனி முதலான பகுதிகளில் தார் சலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | 40.00 |
| | சிப்பம்–2 | |
| 2 | பத்திர பதிவு அலுவலகம் முதல் நாயக்கனூர் முடிய, கருவூல அலுவலக சாலை, கஸ்தூரி நகர் மற்றும் ஏ.எம்.கே நகர் முதலான பகுதிகளில் தார் சாலைகள் மற்றும் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 40.00 |
| | சிப்பம்–3 | |
| 3 | கே.கே. நகர் முதல் திண்டுக்கல் சாலை செக்போஸ்ட் முடிய (நாகணம்பட்டி பைப்பாஸ் சாலை) தார் சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 30.00 |
| | மொத்தம் | **110.00** |

மேற்காணும் பணிகளுக்கு மதிப்பீட்டு தொகை ரூ.110.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை ரூ.110.00 இலட்சத்தினை மேற்படி திட்டத்தில் முழு மானியமாக வழங்கி உரிய உத்தரவு வழங்க கேட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 2**

**<u>பொருள் : 3</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 7—வது வார்டு விஸ்வநாத நகர் தெற்கு பகுதியில் முனியப்பன் கோவில் அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2019—20—ன் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதக நாடக மேடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி நாடக மேடை அமைக்கும் இடத்தில் தரைத்தளத்திற்கு மேல் பகுதியில் மின் கம்பி வடம் செல்வதை மாற்றியமைக்க உதவி பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி மின் கம்பி வடத்தை மாற்ற மதிப்பீடு தொகை ரூ.23,160/— மட்டும் செலுத்த கோரி வரப்பெற்ற பட்டியல் தொகையினை செலுத்த அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வரப்பெற்ற பட்டியல் தொகையினை செலுத்தவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண் – 3</u>**

**<u>பொருள் : 4</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நுண் உரக்குடில்கள் பணியின் முன்னேற்றம் குறித்து உயர் அலுவலர்களுக்கு அறிக்கை செய்ய புகைப்படங்கள், திட்ட மதிப்பீடுகள், ஏ3, ஏ4 அளவு வரைபடங்கள் மற்றும் இதர பணிகள் மேற்கொண்டமைக்காக ஆதவா சிஸ்டம்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திடமிருந்து தொகை ரூ.16,750/— மட்டும் கேட்டு வரப்பெற்ற பட்டியல் தொகையினை வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வரப்பெற்ற பட்டியல் தொகையினை, மேற்படி நிறுவனத்திற்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண் – 4</u>**

**<u>பொருள் : 5</u>**

இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் (நகர பேருந்துகள் நிற்குமிடம்) கிழக்கு பகுதியில் உள்ள இலவச சிறுநீர் கழிப்பிடம் இரவு நேரங்களில் மேற்படி பகுதியில் பொதுமக்கள் நடமாட்டம் இல்லாததால் சமூக விரோத செயல்கள் நடைபெறுவதாக பொதுமக்கள் மற்றும் காவல் துறையினர் மூலம் அதிகளவு புகார்கள் வந்தவண்ணம் உள்ளதால், மேற்படி இலவச சிறுநீர் கழிப்பிடத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு வடக்கு பகுதியில் பொதுமக்கள் திறந்தவெளியில் சிறுநீர் கழிக்கும் இடத்தில் மறைவாக இலவச சிறுநீர் கழிப்பிடம் கட்ட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
1. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**<u>தீர்மானம் எண் – 5</u>**

**<u>பொருள் : 6</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 7 வது வார்டு எருமைக்கரடு அருகில் உள்ள தொட்டி சிதலமடைந்து மிகவும் மோசமடைந்துள்ளதால், குடிநீர் ஏற்றி விநியோகிக்கப்படும் போது குடிநீர் வீணாகிறது. மேற்படி தொட்டியினை மராமத்து பணி மேற்கொண்டு கேட் வால்வுகளை புதிதாக அமைக்க நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியானது குடிநீர் பணி என்பதால் அவசர அவசியம் கருதி, ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 6</u>**

<u>ஒட்டன்சத்திரம் நகராட்சி</u>

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 83 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.28.06.2019–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் சாதாரணக் கூட்டம் நாள். 31.01.2020 (வெள்ளிக் கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 30.01.2020

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் : 1**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.3997/2015/பி2 நாள்.06.01.2020–ன்படி, 14 வது மத்திய நிதி ஆணையம் நிதி ஒதுக்கீடு 2019–20 திட்டத்தின் கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு கோரப்பட்டதை தொடர்ந்து, மேற்படி திட்டதிற்கு மதிப்பீடு, திட்ட பிரேரணைகள் தயார் செய்யும் பணிகள் மேற்கொண்டமைக்கான பட்டியல் தொகை ரூ.99,650/–ஐ மட்டும் வழங்க கேட்டு ஆதவா சிஸ்டம்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

3. அனுமதிக்கலாம்.
4. 14 வது மத்திய நிதி ஆணையம் நிதி ஒதுக்கீடு திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்துகொடுத்தமைக்கான பட்டியல் தொகையினை வழங்கங்கவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 7**

**பொருள் : 2**

நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கலை நிறுவனம், குன்னூர் அவர்களின் கடித ந.க.எண்.S4/6323/2018 நாள்.01.08.2018–ல் வரப்பெற்ற கடிதத்தில் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் மேற்படி நிறுவனம் 8 X 8 என்ற அளவில் தேனீர் ஸ்டால் நடத்த இடம் ஒதுக்கீடு செய்ய கோரியதை தொடர்ந்து, நகராட்சி வருவாய் ஆய்வர் மற்றும் நகரமைப்பு ஆய்வர் அறிக்கையின் பேரில் நகராட்சி பொறியாளரால் நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை தொகை (GST நீங்களாக) ரூ.900/– வீதம் நகர பேருந்து நிலையத்தில் நுழைவாயிலில் அமைத்துக்கொள்ள அனுமதி வேண்டி கருத்துரு அனுப்ப அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பேருந்து நிலையத்தில் போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு இடையூரின்றி நகரமைப்பு ஆய்வர் மற்றும் வருவாய் ஆய்வர் ஆகியோர் பரிந்துரைத்த இடத்தில் நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட வாடகை மதிப்பீட்டில் மேற்படி நிறுவனத்திற்கு தேனீர் ஸ்டால் நடத்த அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் – 8**

**பொருள் – 3**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 12 வது வார்டு நாயக்கனூர் பகுதியில் புல எண். 539/2–ல் உள்ள குளம் அமைந்துள்ள இடம் தொடர்பாக உரிமை கோரி நகராட்சிக்கு எதிராக திரு. வி. பழனிச்சாமி கவுண்டர் த/பெ. விருப்பண கவுண்டர் என்ற விருப்பண கவுண்டர் அவர்களால் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஒட்டன்சத்திரம் நீதிமன்றத்தில் வழக்கு எண். 17/2012 ஆக வழக்கு தொடுக்கப்பட்டு வழக்கு நடைபெற்று வந்த நிலையில், 30.09.2016–ம் நாள் மாண்பைமிகு. நீதியரசர் அவர்களால் மேற்படி வழக்கில் நகராட்சிக்கு எதிராக தீர்ப்புரை வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி தீர்ப்புரையினை எதிர்த்து ஒட்டன்சத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் பழனி சார்பு நீதிமன்றத்தில் தடையாணை மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு I.A No 590/2016 மற்றும் A.S.No 46/2016–ல் நடவடிக்கையில் உள்ளது. மேற்படி வழக்கில் அரசு வழக்கறிஞர் திரு.கே.முருகேசன் அவர்களால் ஒட்டன்சத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கினை எதிர்கொண்டு நீதிமன்றத்தில் உத்திரவு நகல் பெற்று தடையாணை நடவடிக்கை மேற்கொண்டமைக்காகவும், மேற்படி தீர்ப்புரையின் மீது பழனி சார்பு நீதிமன்றத்தில் தடையாணை மனு மற்றும் மேல்முறையீடு மனு செய்து வழக்கினை எதிர்கொண்டு நடத்தப்பட்டதில் சார்பு நீதிமன்றம், பழனி நீதியரசர் அவர்ளால் 07.11.2019–ம் நாளில் மேற்படி வழக்கில்

வழக்கு சொத்து அரசுக்கு தானமாக வழங்கப்பட்டுள்ள நிலையில், வாதிகள் வழக்குச் சொத்தில் உரிமை கோர முடியாது என தெரிவித்து விசாரணை நீதிமன்ற தீர்புரை மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்து தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கினை எதிர்கொண்டமைக்காகவும், வழக்கின் தீர்ப்புரையினை கட்டணங்களை செலுத்தி பெற்றமைக்காகவும் அரசு வழக்கறிஞர் திரு.கே.முருகேசன் அவர்களிடமிருந்து, கட்டணங்களாக ரூ.20,000/– மட்டும் வழங்கக் கேட்டு வரப்பெற்ற பட்டியல் மன்றத்தின்அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. வழக்கு மற்றும் தீர்ப்புரை ஆவணங்கள் கட்டணமாக வரப்பெற்ற பட்யல் தொகையினை, நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 9</u>**

**பொருள்–4**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 14 வது மத்திய நிதிக்குழு மானிய நிதி 2019–20–ன் கீழ் ரூ.110.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பபணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.3997/2015/பி2 நாள்.06.01.2020–ல் 3 சிப்பங்களாக பணிகள் தேர்வு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து 3 சிப்பங்களுக்கான மதிப்பீடுகளுக்கும் மண்டல பொறியாளர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.3997/2015/பி2 நாள்.07.01.2020–ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து மேற்காணும் 3 சிப்பங்களுக்கும் 28.01.2020–ந் தேதியில் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. சிப்பம் –1 மதிப்பீடு ரூ.40.00 இலட்சம் பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் திரு.டி.தமிழ்ராஜன், தேனி மற்றும் திரு.ஆர்.பரமானந்தன், உத்தமபாளையம், தேனி ஆகிய இருவரின் தகுதிக்காண் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்வதால் மேற்படியாளர்களின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) 30.01.2020–ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது விபரம் பின்வருமாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.டி.தமிழ்ராஜன்,<br>ஆண்டிப்பட்டி, தேனி | மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.98 % அதிகம் |
| 2 | திரு.ஆர்.பரமானந்தன்,<br>உத்தமபாளையம், தேனி | மதிப்பீட்டினைக்காட்டிலும் 6.29 % அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதமாக இருப்பதால், மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு.டி.தமிழ்ராஜன், தேனி என்பவரின் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.98% கூடுதல் விலை விகிதத்தினை குறைத்து தரக்கோரி சம்மதக்கடிதம் (Consent Letter) கோரியதில் மேற்படியார் தனது 30.01.2020 தேதிய கடிதத்தில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.75 % உயர்வு சதவீதத்தில் மட்டுமே செய்து தர இயலும் என கடிதம் அளித்துள்ளது. தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு ;</u>**

1. மேற்காணும் திட்ட பணியினை 31.03.2020–க்குள் முழுவதுமாக முடித்து பணி முடிவறிக்கை நிதி பயனீட்டு சான்றிதழ் அளித்திட ஆய்வு கூட்ட அறிவுரையில் பணிக்கப்பட்டுள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால், ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், மதிப்பீட்டு உயர்வு சதவீதம் மன்ற தனி அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதாலும், நகராட்சி பொறியாளர் பரிந்துரையின் பேரில் தமிழ்நாடு நகராட்சிகள் பொறியியல் கையேடு விதிமுறை 2.7.2–ன்படியும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 10</u>**

பொருள்–5

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 14 வது மத்திய நிதிக்குழு மானிய நிதி 2019–20–ன் கீழ் ரூ.110.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பபணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.3997/2015/பி2 நாள்.06.01.2020–ல் 3 சிப்பங்களாக பணிகள் தேர்வு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து 3 சிப்பங்களுக்கான மதிப்பீடுகளுக்கும் மண்டல பொறியாளர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.3997/2015/பி2 நாள்.07.01.2020–ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து மேற்காணும் 3 சிப்பங்களுக்கும் 28.01.2020–ந் தேதியில் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. சிப்பம் –2 மதிப்பீடு ரூ.40.00 இலட்சம் பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் திரு.டி.தமிழ்ராஜன், தேனி மற்றும் திரு.ஆர்.பரமானந்தன், உத்தமபாளையம், தேனி ஆகிய இருவரின் தகுதிக்காண் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்வதால் மேற்படியாளர்களின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) 30.01.2020–ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது விபரம் பின்வருமாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.டி.தமிழ்ராஜன்,<br>ஆண்டிப்பட்டி,<br>தேனி | மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.98 % அதிகம் |
| 2 | திரு.ஆர்.பரமானந்தன்,<br>உத்தமபாளையம், தேனி | மதிப்பீட்டினைக்காட்டிலும் 6.51 % அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதமாக இருப்பதால், மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு.டி.தமிழ்ராஜன், தேனி என்பவரின் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.98% கூடுதல் விலை விகிதத்தினை குறைத்து தரக்கோரி சம்மதக்கடிதம் (Consent Letter) கோரியதில் மேற்படியார் தனது 30.01.2020 தேதிய கடிதத்தில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.75 % உயர்வு சதவீதத்தில் மட்டுமே செய்து தர இயலும் என கடிதம் அளித்துள்ளது. தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மேற்காணும் திட்ட பணியினை 31.03.2020–க்குள் முழுவதுமாக முடித்து பணி முடிவறிக்கை நிதி பயனீட்டு சான்றிதழ் அளித்திட ஆய்வு கூட்ட அறிவுரையில் பணிக்கப்பட்டுள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால், ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், மதிப்பீட்டு உயர்வு சதவீதம் மன்ற தனி அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதாலும், நகராட்சி பொறியாளர் பரிந்துரையின் பேரில் தமிழ்நாடு நகராட்சிகள் பொறியியல் கையேடு விதிமுறை 2.7.2–ன்படியும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண் – 11</u>

பொருள்–6

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 14 வது மத்திய நிதிக்குழு மானிய நிதி 2019–20–ன் கீழ் ரூ.110.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பபணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.3997/2015/பி2 நாள்.06.01.2020–ல் 3 சிப்பங்களாக பணிகள் தேர்வு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து 3 சிப்பங்களுக்கான மதிப்பீடுகளுக்கும் மண்டல பொறியாளர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.3997/2015/பி2 நாள்.07.01.2020–ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து மேற்காணும் 3 சிப்பங்களுக்கும் 28.01.2020–ந் தேதியில் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. சிப்பம் –3 மதிப்பீடு ரூ.30.00 இலட்சம் பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் திரு.டி.தமிழ்ராஜன், தேனி மற்றும் திரு.ஆர்.பரமானந்தன், உத்தமபாளையம், தேனி ஆகிய இருவரின் தகுதிக்காண் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்வதால் மேற்படியாளர்களின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) 30.01.2020–ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது விபரம் பின்வருமாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.டி.தமிழ்ராஜன்,<br>ஆண்டிப்பட்டி,<br>தேனி | மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.98 % அதிகம் |
| 2 | திரு.ஆர்.பரமானந்தன்,<br>உத்தமபாளையம், தேனி | மதிப்பீட்டினைக்காட்டிலும் 5.84 % அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதமாக இருப்பதால், மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு.டி.தமிழ்ராஜன், தேனி என்பவரின் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.98% கூடுதல் விலை விகிதத்தினை குறைத்து தரக்கோரி சம்மதக்கடிதம் (Consent Letter) கோரியதில் மேற்படியார் தனது 30.01.2020 தேதிய கடிதத்தில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.75 % உயர்வு சதவீதத்தில் மட்டுமே செய்து தர இயலும் என கடிதம் அளித்துள்ளது. தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மேற்காணும் திட்ட பணியினை 31.03.2020–க்குள் முழுவதுமாக முடித்து பணி முடிவறிக்கை நிதி பயனீட்டு சான்றிதழ் அளித்திட ஆய்வு கூட்ட அறிவுரையில் பணிக்கப்பட்டுள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால், ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், மதிப்பீட்டு உயர்வு சதவீதம் மன்ற தனி அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதாலும், நகராட்சி பொறியாளர் பரிந்துரையின் பேரில் தமிழ்நாடு நகராட்சிகள் பொறியியல் கையேடு விதிமுறை 2.7.2–ன்படியும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண் – 12</u>

**<u>பொருள் : 7</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 14வது மத்திய நிதி ஆணையம் நிதி ஒதுக்கீடு (CFC) 2019–2020–ன் கீழ் நகராட்சி பகுதிகளில் ரூ.110.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை, வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நாள்.06.01.2020–ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், மதுரை அவர்களால் 07.01.2020–ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 28.01.2020–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்புத்துறை, திண்டுக்கல் அவர்கள் வாயிலாக மாவட்ட அளவிலான அரசு ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், மக்கள் முகம் தினசரி நாளிதழில் மாவட்ட அளவில் 09.01.2020–ம் நாள் வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.13,200/– மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை மக்கள் முகம் தினசரி நாளிதழ் விளம்பர நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணிகளுக்கான மாவட்ட அளவிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தமைக்கான பட்டியல் தெரிகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 13</u>**

**<u>பொருள் : 8</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி வழியாக பழனி பாலதண்டாயுதபாணி திருக்கோவிலில் தைப்பூச திருவிழா 2020–ம் ஆண்டு 08.02.2019–ம் நாள் நடைபெறவுள்ளதை தொடர்ந்து, ஒட்டன்சத்திரம் நகராட்சி வழியாக பாதையாத்திரை பக்தர்கள் அதிகளவில் செல்வதால், நகராட்சி எல்லை முடிய சிறப்பு மின்விளக்கு வசதி ஏற்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களால் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி எல்லை முடிய மின் விளக்கு வசதி ஏற்படுத்த 13.01.2020–ம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | பொருள்கள் விபரம் | ஏ.பி.ஆர்.திரிரோஸ், சவுண்ட் சர்வீஸ், ஒட்டன்சத்திரம் ரூ | கே.எஸ் சவுண்ட்ஸ் சர்வீஸ் மற்றும் வாடகை பாத்திரம், ஒட்டன்சத்திரம் ரூ | பி.கே.திரிரோஸ், சவுண்ட் சர்வீஸ், ஒட்டன்சத்திரம் ரூ |
|---|---|---|---|---|
| 1 | பழனி தைப்பூசம் பக்தர்களுக்கு சாலையோரம் மின் விளக்குகள் அமைக்க ( 1–க்கு நாள் 1–க்கு) | 40/– | 50/– | 47/– |
| 2 | மரம் (விளக்கு அமைக்க தேவையான மரம்) ( 1–க்கு நாள் 1–க்கு) | 10/– | 17/– | 14/– |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் ஏ.பி.ஆர்.திரிரோஸ், சவுண்ட் சர்வீஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனம் விலைப்புள்ளி குறைவாக வரபெற்றது மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 14</u>**

**பொருள் : 9**

ஒட்டன்சத்திரம் நகராட்சி வழியாக பழனி பாலதண்டாயுதபாணி திருக்கோவிலில் தைப்பூச திருவிழா 2020–ம் ஆண்டு 08.02.2019–ம் நாள் நடைபெறவுள்ளதை தொடர்ந்து, ஒட்டன்சத்திரம் நகராட்சி வழியாக பாதையாத்திரை பக்தர்கள் அதிகளவில் செல்வதால், பாதையாத்திரை செல்லும் பக்தர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர், வேணல் பந்தல், தற்காலிக கழிவறை, பிளாஸ்டிக் விழிப்புணர்வு தட்டிகள் மற்றும் முதலுதவி முகாமிற்கு தேவையான மருந்துப் பொருட்கள் விநியோகம் செய்தல் முதலான பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான உத்ததேச செலவினம் ரூ3.00 லட்சம் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 15**

**பொருள் : 10**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு பயன்பாட்டுக்கான ஈப்பு வாகனம் எண்.TN 57 AW 4037 வாகனத்திற்கு பழுது நீக்கப்பணிகள் மேற்கொண்டமைக்காக AUTOMOTIVE MANUFACTURERS PVT LTD, Madurai என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.28,039/– மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பொறியியல் பிரிவு ஈப்பு வாகனத்திற்கு பழுது நீக்கப் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி நிறுவனத்திற்கு பட்டியல் தொகையினை தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று வழங்கவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் – 16**

**பொருள் : 11**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் தேசிய இளம்பிள்ளை வாத நோய் ஒழிப்புத் திட்டம் தொடர்பான சொட்டு மருந்து வழங்கும் சிறப்பு முகாமிற்கு கட்டமைப்பு வசதி செய்து 19.01.2020 அன்று 5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டதை உறுதி செய்து அறிக்கை சமர்ப்பிக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், நலப்பணிகள் மற்றும் மருத்துவம் திண்டுக்கல் அவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும் மருத்துவ அலுவலர், ஒட்டன்சத்திரம் அவர்கள் பேருந்து நிலையம் முன்பு ஒலிப்பெருக்கி வசதியுடன் தற்காலிகமாக 3 நாட்கள் (18.01.2020 முதல் 21.01.2020) பந்தல் அமைத்து முகாம் சிறப்பாக நடைபெற வேண்டும் என கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேற்படி பணிகள் நடைபெற உத்தேச செலவினம் ரூ.25,000/– தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் – 17**

**பொருள்–12**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் உற்பத்தியாகும் விற்பனை செய்ய இயலாத பயன்படுத்த முடியாத எளிதில் தீப்பிடிக்க கூடிய உலர் கழிவுகளை எரியூட்டும் மையம் மூலம் அப்புறப்படுத்த திண்டுக்கல் மாநகராட்சி மூலம் 10 டன் அளவுள்ள மையம் அமைக்க ரூ.1 கோடி க்கு நகராட்சி நிர்வாக ஆணையர் ந.க.எண்.29426–1/பி3/2019 நாள்.06.12.2019–ல் SBM 2019–2020–ல் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கியுள்ளார். மேற்படி திட்டத்தில் திண்டுக்கல் மாநகராட்சி, பழனி, கொடைக்கானல், பல்லடம், கரூர் மற்றும் ஒட்டன்சத்திரம் நகராட்சி உள்ளடக்கியது. மேற்படி மையம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவுகளை இதில் பயன்படுத்தும் உள்ளாட்சி நிறுவனம் மேற்கொள்ள மன்ற அனுமதி பெற்று தர கோரி மாநகராட்சி ஆணையாளர் திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.16495/2017/இ4/ நாள்.24.12.2019–ல் கோரியுள்ளார். ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் தினமும் சேகரமாகும் உலர் கழிவுகளை எரியூட்டும் மையத்திற்கு அனுப்புவதற்கு டன் அளவுக்கு ஏற்றார் போல் தொகை வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1973/2019/எச்1)

**தீர்மானம் எண் – 18**

**பொருள் : 13**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எண்: WP.MD.1223/2020–ன்படி வழக்கு நடைபெற்று வந்த நிலையில் மேற்படி வழக்கிற்கு மாண்பைமிகு நீதியரசர் அவர்களால் தீர்புரை வழங்கப்பட்டதை தொடர்ந்து, அரசு வழக்கறிஞர் திரு.மாரிசெல்லையாபிரபு அவர்களிடமிருந்து வழக்கு கட்டணம் மற்றும் தீர்ப்புரை நகல் முதலான கட்டணங்களுக்காக தொகை ரூ.10,000/– வழங்க கேட்டு வரப்பெற்றப் பட்டியல் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி வழக்கறிஞரிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகையினை வழங்கவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 19**

**பொருள் : 14**

ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலக தரை தளத்தில் 4 அறைகளுக்கு மின்சார பொருட்கள், குடிநீர் பொருட்கள், விளக்கு பரிசோதனை செய்தல் மூன்று அறைகள் போக மீதமுள்ள அறையில் ஆதார் கார்டு எடுக்கும் அறை அமைக்கவும், மேற்படி நான்கு அறைகளுக்கு மின்சார சாதனம் பொருத்தி, மின் இணைப்பு வசதி செய்யவும், நகராட்சியில் புதிதாக வாங்கப்பட்ட 21 வாகனங்களை சார்ஜ் செய்ய சார்ஜ் பிளக்கு எம்.சி.பி ஆகியவை அடைத்து மின்சார வசதி அமைத்தல் பணி மேற்கொள்ள ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் 26.12.2019–ம் நாள் தனிஅலுவலர் அவர்கள்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்காக 28.01.2020–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 0.04 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.எம்.முத்துக்கண்ணன் | 3.97% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.ஹச்.முகமது ரஸ்மி என்பவர் 0.04% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஹச்.முகமது ரஸ்மி என்பவர் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 20**

**பொருள் : 15**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் தெரு மின்விளக்குகள் பராமரிப்பிற்கு தேவையான உதிரி சாமான்கள் சப்ளை செய்யும் பணி மேற்கொள்ள 26.12.2019–ம் நாள் தனிஅலுவலர் அவர்கள்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணி மேற்கொள்ள ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் 28.01.2020–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 0.06 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.எம்.முத்துக்கண்ணன் | 3.12% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.ஹச்.முகமது ரஸ்மி என்பவர் 0.06% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஹச்.முகமது ரஸ்மி என்பவர் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 21**

**பொருள் : 16**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 8 வது வார்டு பழனி சாலையில் சரஸ்வதி பெட்ரோல் பங்க் முதல் அபி திருமண மண்டபம் வரை பாலம் மற்றும் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் 28.01.2020–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | சபரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.04 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.பி.வீராச்சாமி | 2.25% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு சபரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவனத்தின் 0.04% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மதிப்பீட்டு விலையில் 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சபரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 22**

**பொருள் : 17**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 வது வார்டு சாய்பாபா கோவில் அருகில் உள்ள நுண் உரக்கூடத்தில் (MCC Center) உள்ள இயந்திரங்கள் பழுதடைந்து விட்டதால் அவற்றை மாற்றி அமைக்க தேவையான கான்கீரிட் மேடை அமைக்க நகராட்சி பொறியாளரால் மதிப்பீடு தயார் செய்யப்பட்ட தொகை ரூ.0.70 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 23**

**<u>பொருள் : 18</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 3 வது வார்டு பகுதியில் உள்ள பேருந்து நிலைய பொதுக்கழிப்பிட பயன்பாட்டுக்கான பொது கிணறு உள்ள 7.5 கு.வே மின் மோட்டார் பழுதடைந்துள்ளதை பழுது நீக்கப்பணி மேற்கொள்ள அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி, விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

**<u>தீர்மானம் எண் – 24</u>**

**<u>பொருள் : 19</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் 2451 தெரு மின் விளக்குகள் மற்றும் 173 மினி பவர் பம்ப்கள் பயன்பாட்டில் உள்ளது. அவைகளை இயக்க பயன்படுத்தப்படும் சுவிட்ச் போர்டுகளில் உள்ள பீஸ் கேரியர்கள் மற்றும் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டுள்ள பெட்டிகள் உடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதை மாற்றியமைக்கும் பணி மேற்கொள்ள அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி, விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

**<u>தீர்மானம் எண் – 25</u>**